செய்தி வெளியீடு எண் : 1190 நாள் : 15.07.2022

## செய்தி வெளியீடு

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை பெய்து வருவதால் காவிரியில் தற்பொழுது சுமார் 1.08 லட்சம் கன அடி தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டுள்ளது. இன்று மதியம் 12.00 மணி நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர் மட்டம் 114.81 அடி, கொள்ளளவு 85.434 டி.எம்.சி. நீர்வரத்து 1.08 லட்சம் கன அடியாக உள்ளது. இந்நிலையில் தண்ணீர் வரத்து இருந்தால், 16.07.2022 இரவு மேட்டூர் அணை 120 அடியை எட்டும் என எதிர்நோக்கப்படுகிறது.

தற்சமயம் குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து 25,000 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் 5.20 லட்சம் ஏக்கர் பாசனம் பெறும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் கால்வாய் மூலம் 45,000 ஏக்கர், புள்ளம்பாடி வாய்க்கால் மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்கள் மூலம் 42,000 ஏக்கர் பாசன பரப்புகள் பயன்பெறும். இந்த வாய்க்கால்களின் மூலம் 129 கண்மாய்களுக்கு தண்ணீர் நிரப்ப இயலும், இதன் மூலம் 2000 கன அடி தண்ணீர் எடுத்து பயன்படுத்தலாம்.

மேலும், கல்லணையிலிருந்து பிரியும் கல்லணைக் கால்வாய் மூலம் 694 கண்மாய்களுக்கு 1000 கன அடி தண்ணீர் எடுத்து வழங்கவும், கொள்ளிடத்தின் மூலம் கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களிலுள்ள 1.32 லட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறவும் மற்றும் வீராணம் ஏரியை நிரப்பவும் 2000 கன அடி தண்ணீர் தேவைப்படுகிறது. ஆகமொத்தம் 5000 கன அடி தண்ணீர் கூடுதலாக எடுத்து பயன்படுத்தலாம்.

மேலே குறிப்பிட்ட வாய்க்கால்களுக்கு ஆகஸ்டு 1–ஆம் தேதி தண்ணீர் திறந்து விட பாசன விதி தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் தண்ணீர் இருப்பை கருத்தில் கொண்டு விவசாய பணிகளுக்கு முன்னரே திறந்து விட உத்தேசிக்கப்பட்டு, அனைத்து கால்வாய்களிலும் 16.07.2022 அன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்படும்.

**துரைமுருகன்,**
**அமைச்சர் (நீர்வளம்)**

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in